# பாகவத மேள நாடகங்களில் ராகங்கள்

புண்டரீகம்

தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் தஞ்சாவூரிலிருந்து சுமார் 18கிலோமீட்டர் தொலைவில் உள்ளது மெலட்டூர். இங்கு வருடந்தோறும் பாரம்பரியமாக நடைபெறும் புராதனமானதும் பாகவதபுராணங்களை அனுசரித்து பக்தி அடிப்படையாகக் கொண்டு ஆண்களே பெண் வேடம் தரித்து தெலுங்கு மொழியில் நிகழ்த்தக்கூடிய கலையே பாகவதமேளமாகும். இயற்றியவர் மெலட்டூர் வெங்கட்ராம சாஸ்த்ரிகள். அதில் நாங்கள் 1986 முதல் கடந்த 38 வருடகாலமாக இசைத் தொண்டு புரிந்து வருகிறோம். இன்று இந்நாடகங்களில் இடம் பெறக்கூடிய ராகங்களைப் பற்றிக் காண உள்ளோம்.

1. புண்டரீகம் தொடர்ந்து மேளப்ராப்தி என்னும் பூர்வரங்கப் பகுதி.

2. பிரஹ்லாத சரித்திரத்தில் இடம்பெறும் விக்னேச்வரர் பிரவேச தரு. ராகம்:பேகட தாளம்: ஆதி. இந்நாடகங்களில் ஒவ்வொரு தரு ஆரம்பத்தில் முகஜதி, தரு முடிவில் அந்தந்த தாளத்திற்குரிய அந்த்ய ஜதியும் இடம்பெறும்.

கணபதி வச்சே ஜூடரே - பக்திதோ மீரு........
தனரக நொஸங்குசு தயாமீரி தா முத்துகா(கணபதி)

3. பிரஹ்லாத சரித்திரத்தில் அரக்கனாகிய ஹிரண்யகசிபு பிரவேசத்திற்கு காம்பீரயமான தேவகாந்தாரி ராகத்தினை பயன்படுத்தியுள்ளார்.

கடுவடி தனுஜுல ஜேரியடு கம்முகொனி முதமு மீரியடு.......

4. ஹரிச்சந்திர நாடகத்தில் சந்த்ரமதி பிரவேசத்திற்கு கம்பீரமானதும் வீரம் பொருந்திய ராகமான அடாணாவை மிக அழகாக திரை தீர்மானத்துடன் திஸ்ரகதியில் அமைத்துள்ளார்.

வெடலனு சந்த்ரமதி விபுனி செந்தகுநிபுடு
தந்தகதக - தந்தகதாம் - திந்திகிதிகி - திந்திகிதீம்......

5. பிரஹ்லாத சரித்திரத்தில் பிரஹ்லாதன் பிரவேச தரு பைரவி ராகத்தில் ஆதி தாளத்தில் ஸ்வர ஸாஹித்தியத்துடன் மிக நேர்த்தியாக அமைத்துள்ளார்.

நிநித நிநித தப மநிதப மகரிக - மப தம பமகரி கமப ம பா,,
அடுக டுகுகுதனமெய்மர சியபுடு - ஹரிஹரிஹரியனி பலுகுஸதா
பமகா ரிகமப தநிஸ்க் ரிஸ்நித நிப தநி ஸ்நிதப மதப மகரி கம பத
தரலோநிகிலமுஹரிமய மனிமிகுலதெலுபு சுமுதமுனஜன குனிஸரஸ கிடு
(ப்ரஹ்லாதுடு)

6. பிரஹ்லாத சரித்திரத்தில் லீலாவதி - ஹிரண்யகசிபு ஸம்வாத தரு பரஸ் ராகத்தில் ஆதி தாளத்தில் அமைந்துள்ளது. தருவின் காலப்ரமாணம் சௌககாலத்தில் லீலாவதி பகுதியும், துரித காலத்தில் ஹிரண்யகசிபுவின் பகுதியும் கையாளப்படுகிறது..

இந்த கோபமேமிரா ஸாமி இலலோனகல வைருல
பந்த மணகிம்ப வலசி பகபெட்டி நாவோ

எலமினி நே ஜெந்தின வரமுலு எருகவா ஏமே நீவு
அலமுக்கண்டி நா முந்துகா நிலுவ வெரசுனே

7. ஹரிச்சந்திர நாடகத்தில் சந்த்ரமதி தனது சோகத்தை வெளிப்படுத்தும் விதமாக கண்டா ராகத்தில் அமைந்த ஸீஸபத்யம். மெலட்டூரில் பயன்படுத்தக் கூடிய இந்த ராகம் துக்ககண்டா என்றும் சொல்லப்படுகிறது.

நெல ராஜு வம்ச அந்தலினி நே ஜன்மிஞ்சி வெலயங்க பாஸ்கருனி குலமுலோ பெண்ளாடி

ணலலித ஹரிச்சந்த்ர ஜனபதீந்த்ருனி பொந்தி பலு சோகமுலு பொந்த வலச ஈ புவினி

8. கம்ச சரித்ர நாடகத்தில் கம்சன் தேவகியின் எட்டாவது குழந்தையைக் கொல்ல முயலும்போது கம்சனின் காலைப் பிடித்துக் கொண்டு புலம்பும் விதமாக அமைந்த ஆகிரி ராக தரு. ராக காலத்தை அனுசரித்து இந்த ராகம் பின்னிரவில் பாடுவதற்கு ஏற்றவாறு அமைந்துள்ளது.

இஸுமந்த நெனரஸுமி அன்னா அன்னா ஈ

சிசுவுன மன்னிஞ்சுமி அன்னா அன்னா

9. குறிஞ்சி ராகத்தில் ஸீதாகல்யாண வைபோகமே போன்ற திருமணச் சடங்கு பாடல்கள் அமைந்த மங்களகரமான ராகம். ஆனால் ஹரிச்சந்திர நாடகத்தில் இரண்டாம் பாகத்தில் மயான காண்டத்தில் சந்த்ரமதி இறந்த குழந்தையை இரவில் தேடி கண்டு தன் மடியில் இருத்தி கதறி அழும் குறிஞ்சி ராக தரு.

சின்னிபாலா ஈவேள நின்னெடசி தாள - மின்னைன நா ஜீவரத்னமா கன்னுலோ நீ மாணிக்யமா

10. ஸாவேரி ராகமானது மிகவும் மிருதுவான ராகமாகும். ஆனால் கம்ச சரித்திரத்தில் கம்ஸாஸுரன் பிரவேசத்தை ஸாவேரியில் அமைத்துள்ளார். ஸதி ஸாவித்ரி நாடகத்தில் ஸாவித்ரியானவள் ஸத்யவானைத் திருமணம் செய்யவிரும்பி ஸாவித்ரி தேவியைத் துதிக்கிறாள். இந்த தருவானது தல முத்திரை மற்றும் தலத்தின் தெய்வ முத்திரையும் ஒருங்கே கொண்டு ஸாவேரி ராகத்தில் அமைந்துள்ளது.

தற்போது கம்சன் பிரவேசம்:

வெடலெநம்மா கம்ஸாஸுருடிதுகோ - வேடுககா நிபுடு

அடுத்ததாக ஸதிஸாவித்ரியில் அமைந்த தரு:

நெரநம்மிதினி நீவேகதியனி - நிகிலலோக பரிபாலினி ஸாவித்ரி

(மத்யமகாலம்)

மன்னன ஜேஸி நா மனவினி வினி நா
குலமு செலகுடகு தயசேயவலதா
உன்னதபுரீச்வர ராணி புராணி
ஜகமுல ப்ரோசே ஶ்ரீசிவப்ரியே(நெரநம்மிதினி)

11. ஹரிச்சந்திர நாடகத்தில் இரண்டாம் பாகத்தில் ஆபோகி ராகத்தில் அமைந்த ஏலாபதம்.

ஆலினி வெலகிச்சி அப்புதீர்ச்சுடகு விச்வநாதா
ஈ வேள தீஸே வாரு வெதகினா தகலரு விச்வநாதா

12. ஆனந்தபைரவி ராகமானது மிகவும் கருணையும் மகிழ்ச்சியும் தரக்கூடியது. அத்தகைய ராகத்தினை சிருங்கார ரஸபூர்வமான உஷாபரிணய நாடகத்தில் உஷாவானவள் தனது விரஹதாபத்தை தனது தோழி சித்ரரேகாவிடம் கூறுவது போல் ஆதி தாளத்தில் அமைந்த பதவர்ணம்.

ஏலாகு தாளுது நம்ம - ஏமீஸேயுது நம்ம

சரணம்

காரவிஞ்சி நன்னேலி நாடே
பாப பமகரிஸ நி.ஸகரி ஸாஸா - ஸஸஸா மாகரி கமபக மாமா
கார விஞ்சிநன் னே...லி நா டே - கலலோ நன்னெடபா.யனுநாடே
பமபஸ் ஸ்ஸ்ஸ்ஸ் நிஸ்க்ரி ஸ்ாஸ்ா - ஸ்ாஸ்நி தபபா தபமம கரிகம
மா.ருனி வசமுக ஜேர்ச்சி நாடே - மாயகா .டுநன் னுமரசிநா..டே
(ஏலாகுதாளுது)

இதே போல் ஹரிஹரலீலா விலாஸ நாடகத்தில் மோகினி தனது விரஹதாபத்தை எடுத்துச் சொல்லும் போதும் இந்த ராகத்தை பயன்படுத்தியுள்ளார். (மோகமெடுல சைதுனே ஓ ராம நே ஏமனி தமி தாகனே)

13. தோடி ராகம் அதிகமான உருப்படிகளைக் கொண்ட ராகம். ஹரிச்சந்திர நாடகத்தில் லோகிதாசன் பிரவேசதருவில் அனுபல்லவியில் தோடி என்கிற ராகப்பெயரினை மிக அழகாக இணைத்துள்ளார்.

முதமலரக தன தோடி வாரிதோ - முத்ஸடலாடுசு முத்து முத்துகா
(இதுகோ வெடலனு)

14. ஹரிச்சந்திர நாடகத்தில் ஹரிச்சந்திரன் தனது வாழ்க்கையில் மகிழ்ச்சியான ஆரம்ப நிலையையும் தனது தற்போதய துன்ப நிலையையும் எண்ணி புலம்புவதை செஞ்சுருட்டி ராகத்தில் மிச்ரசாபு தாளத்தில் படைத்துள்ளார்..

ஸாகேதபுரமந்து ஜயமொந்தி உண்டினி யால
ஈ சோகாப்திலோ படி தொரபட நாய ஹா தைவமா தைவமா
(ஏனிக குர்ரமு எக்கி திரிகிதினி யால
இபுடு நேனு ஈ எண்டலோ நிலுவ நாய ஹா தைவமா தைவமா)

15. ஸாமா ராகம் மிகவும் கருணை பொழியும் சாந்தமான ராகமாகும். ஹரிச்சந்திர நாடகத்தில் காட்டிற்குச் சென்ற லோகிதாசன் இரவாகியும் வீடு திரும்பவில்லை என்னும் வேதனையில் சந்த்ரமதி புலம்புகிறாள். இந்த தருவானது ஆதி தாளத்தில் மத்யம காலத்தில் மத்யம ஸ்ருதியில் பாடப்படுகிறது.

இந்த பொத்தாயனே இகனேமி சேதுனே - இந்திரோ நா ஸுதுடு இங்க ராடாயனே
ஜாம சீகடிலோன ஸரகுண ரம்மண்டினே - வாடிந்த ராகனுண்ட ஏமிகாரணமு

16. ரீதிகௌளை ராகத்தில் அதிகமான உருப்படிகள் அம்பிகையின் மீது இயற்றப்பட்டிருக்கும். ஹரிச்சந்திர நாடகத்தில் லோகிதாசனை காட்டிற்கு தர்பைப்புல் கொண்டுவருவதற்கு அனுப்புகையில் தெய்வத்திடம் ப்ரார்த்தனை செய்யும் விதமாக அமைந்த ஸீஸபத்யம்.

பூதேவி நா பிட்ய பாதலிடின அத்ஸோட சீமநொக்கனே மன்னிம்ப வலயு
அட்சயமுக பூர்ணகடாக்ஷுனுஞ்சி ஆத்ம ரட்சணமு சேயுடி அனுதினம்பு
(போயிரா ரா அன்னா அவனிகி போயிரா ரா அன்னா)

17. தர்பாரி கானடா ராகமானது சந்த்ரமதி தனது ஆரம்பநிலையையும், தற்போதைய நிலையையும் எண்ணி வருந்துவது பத்யம். ஏறக்குறைய 1968 முன்பிருந்தே தர்பாரிகானடாவும் பின்வரக்கூடிய சிந்துபைரவியும் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேடபை ஸகுலதோ மெலகிதினி அலநாடு
ஆஹா நேனு ஒண்டிகானைதிநேடு

18. சிந்துபைரவி ராகம் தாளபத்யம் (ஹரிச்சந்திர நாடகம்)
தாளஜாலனே ஏமந்துனே தாளஜாலனே ஏமந்துனே
ஆவதாகின விதான நாமதி அலயுசுன்னதி ஹாகடா
தைவமிந்த சோதிம்ப வலச (தாள ஜாலனே)

19. ஆரபி, காம்போதி, கல்யாணி, உஸேனி, மோகனம், சங்கராபரணம் போன்ற பழமையான ராகங்களும், கும்மகாம்போதி, மங்களகைசிகி, சுருடிமல்லார்(கானமூர்த்தி ஜென்யம்) போன்ற அபூர்வ ராகங்களும் காணப்படுகிறது.

20. நிறைவாக பிரஹ்லாத சரித்திரத்தில் பூர்விகல்யாணி ராகத்தில் அமைந்த ஸ்தம்பஸ்துதி - பூர்விகல்யாணி - ஆதி திஸ்ரநடை

தேவதேவ இதே ஸமயமய்யா ஈ ஸ்தம்பமுன ஆவஹிஞ்சி நன்னு ப்ரோவ
வய்யா - தாமஸமிபுடால அச்சுதாப்தி நிலயுடைன வரத